ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் கதை எழுதுதல் திறனைத்

தொடர்ச்சித்திரங்களைப் பயன்படுத்தி மேம்படுத்துதல்

# செயல் ஆராய்ச்சி அறிக்கை


ஆய்வாளர்

வெ.ந.சடாச்சரவேல்

முதுநிலை விரிவுரையாளர்

மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்

பாலையம்பட்டி, விருதுநகர் மாவட்டம்.

இணை ஆய்வாளர்

திருமதி.மு.கற்பகவல்லி

தலைமையாசிரியை,

ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி, செட்டிக்குறிச்சி

அருப்புக்கோட்டை ஒன்றியம்



சமர்ப்பணம்:

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

சென்னை - 06

மார்ச்சு – 2024

# நன்றியுரை

எனது செயலாய்வை மேற்கொள்ள மேலான அனுமதியளித்து உதவிய, இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், சென்னை – 6, அவர்களுக்கு எனது நன்றியறிதலை உரித்தாக்குகிறேன்.

நான் செயலாய்வை மேற்கொள்ள உரிய நேரத்தில் அங்கீகாரம் வழங்கி உதவிய செயலாய்வுக் குழுவினருக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது செயலாய்வுப் பணியைச் செம்மையுற முடித்திட ஆக்கமும் ஊக்கமும் அளித்ததோடு மட்டுமின்றி வழிகாட்டியும் உதவிய **திருமதி.முனைவர்.பா.செல்வி, முதல்வர்** அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது செலாய்வுப்பணிக்கு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகள் நல்கி ஊக்கப்படுத்திய பாலையம்பட்டி, மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தைச் சார்ந்த கல்வியாளர்களுக்கும் தக்க உதவிகள் புரிந்த அமைச்சுப் பணியாளர்களுக்கும் உளப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் எனது செயலாய்வுப் பணிக்கு முழுமையான ஒத்துழைப்பு நல்கிய திருமதி.கற்பகவள்ளி, தலைமையாசிரியை, ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, செட்டிக்குறிச்சி அவர்களுக்கும் இதயப்பூர்வமான நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

- வெ. ந. சடாச்சரவேல்

## பொருளடக்கம்


| வ.எண். | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | அறிமுகம் | 1 |
| 2 | ஆய்வின் பின்புலம் | 12 |
| 3 | ஆய்வின் தேவை | 15 |
| 4 | ஆய்வு நோக்கங்கள் | 16 |
| 5 | பிரச்சனையைக் கண்டறிதல் | 16 |
| 6 | பிரச்சனையின் வரையறை | 17 |
| 7 | பிரச்சனைக்கான உத்தேசக் காரணங்கள் | 17 |
| 8 | பிரச்சனைக்கான உத்தேசத் தீர்வுகள் | 17 |
| 9 | செயல்படு கருதுகோள் | 18 |
| 10 | ஆய்வுமுறை | 19 |
| | அ. செயலாய்வுக்கு உட்படுவோர் | 19 |
| | ஆ .ஆய்வுக்கருவி | 19 |
| | இ. இடையீட்டுச் செயல்பாடுகள் | 20 |
| 11 | தரவுப் பகுப்பாய்வு | 25 |
| 12 | ஆய்வு முடிவுகள் | 29 |
| 13 | பரிந்துரைகள் | 29 |
| 14 | முடிவுரை | 30 |
| | நிழற்படங்கள் | 31 |
| | துணை நூற்பட்டியல் | 35 |
| | பின்னிணைப்பு<br>முன் சோதனை, பின்சோதனை | 36 |

## 1.அறிமுகம்

'தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு

கற்றனைத் தூறும் அறிவு'

என்பது வள்ளுவன் வாக்கு. ஒருவன் எந்த அளவிற்கு பற்பல நூல்களை கற்றுள்ளானோ அந்த அளவிற்கு அவனது அறிவு மேம்படும் என்பதை இந்தக் குறளின் மூலம் அறிய வருகிறோம். அவ்வாறு ஒருவன் கற்றுத் தேர்ந்த அறிவினை தனது பேச்சாலும் எழுத்தாற்றலாலும் வெளிப்படுத்த முடியும். அந்த வகையில் எழுதுதல் திறன் என்பது தம் கருத்தை எழுத்து வடிவில் தெளிவாகவும் நம்பத்தகுந்ததாகவும் வெளிப்படுத்தும் திறன் ஆகும். எழுதுதல் திறன் மிகவும் முக்கியமானது, ஏனென்றால் மக்கள் தங்கள் எண்ணங்களையும் கருத்துக்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள அது உதவுகிறது. பள்ளி, வேலை மற்றும் வாழ்க்கையில் வெற்றி பெற எழுதுதல் திறன் அவசியம்.

கல்வியில் வெற்றிபெற, மாணவர்கள் எழுதவேண்டிய தேர்வுகள் மற்றும் பணிகளைச் சிறப்பாகச் செய்ய வலுவான எழுதுதல் திறன் தேவை. வேலையில் அல்லது எந்தத் தொழிலிலும் வெற்றிபெற, ஒருவருக்கு நல்ல எழுதுதல் திறன் தேவை, இதனால் ஒருவர் திறம்பட தொடர்பு கொள்ளவும், சிறந்த ஆவணங்களை உருவாக்கவும் முடியும்.

நண்பர்கள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுடனான உறவுகள் முதல் நிறைவான வாழ்க்கையை உருவாக்குவது வரையிலான அனைத்திற்கும் எழுதுதல் திறன் தேவைப்படுகிறது.

### 1.1 மொழித்திறன்கள்

மொழித்திறன்கள் என்பது மொழியை வளப்படுத்தும் செயற்பாட்டினைச் செய்யும் மொழியின் கூறுகளைக் குறிக்கும். மொழித்திறன்கள் நான்கு உள்ளன. அறிவின் வளர்ச்சியில் பங்காற்றுவது மொழியென்றால் மொழியின் வளர்ச்சியில் பங்காற்றுவது மொழித் திறன்களாகும். ஒருவரிடம் மொழிப்புலமை காணப்படுகின்றதென்றால் இந்நான்கு

மொழித்திறன்களும் அவரிடமுள்ளது என்பதே அதன் பொருளாகும். ஆகவே அறிவிற்கும் அதன் வளர்ச்சிக்கும் அடிப்படையாக அமையும் மொழித்திறன்களாவன,

1. கேட்டல் திறன் ( Listening skill)

2. பேசுதல் திறன் (Speaking skill )

3. வாசித்தல் திறன் (Reading skill)

4. எழுதுதல் திறன் (writing skill)

**1. கேட்டல் திறன் (Listening skill):**

மனிதனின் மொழித்திறனை நாம் அறிந்து கொள்ள அவன் கருவறையில் கருவுற்ற காலம் வரை சென்று ஆராய வேண்டியுள்ளது. ஏனெனில் ஒரு குழந்தை தன்னுடைய தாயின் கருவறையில் இருக்கும் ஆறாவது மாதத்திலிருந்து தன்னை சூழவுள்ள சூழலில் உள்ள ஒலிகளைக் கேட்கும் சக்தியினைப் பெற்றுக் கொள்கிறது. ஆக ஒவ்வொரு மனிதனும் விரும்பியோ விரும்பாமலோ கருவிலிருந்து தனது கேட்டல் திறனை பயன்படுத்துகிறான்.

அதே போன்று பிறந்த பின்னரும் தன்னை சூழவுள்ளவர்களால் பயன்படுத்தப்படும் ஓசைகளையும் கேட்கின்றான். பின்னர் அந்த சப்தங்களை விளங்கிக் கொண்டு அந்த சப்தங்களைக் கொண்டே பேசவும் செய்கிறான். இவ்வாறு கேட்டுவந்த ஒலிகளே அவனது மொழியினை தீர்மானிக்கின்றன.

காட்டாக, வெவ்வேறு சூழல்களில் வாழும் மனிதர்கள் வித்தியாசமான மொழியினை பேசுவதனை அறிவோம். அதற்கு காரணம் அவர்களது செவிப்புலனும் அவர்கள் வாழ்ந்த சுழலுமாகும். அவர்களது சூழலில் எந்த மொழி பயன்பாட்டில் உள்ளதோ அதனையே அவர்கள் செவியுற்று காலப்போக்கில் பேசவும் செய்கின்றார்கள்.

இதனால்தான் குழந்தைகள் உள்ள இடங்களில் மிகவும் கவனமாக பேசவேண்டும் என்றும் கூறுவர். குழந்தைப் பருவம் என்பது கேட்கின்ற விடயங்களை தனது ஆழ்மனதில் மிகவும் இலகுவாக பதிவுசெய்யக் கூடிய பருவமாகும். குழந்தைகள் கருவில் இருக்கும் போதே

நல்ல கருத்துக்களை அதிகம் கேட்க, வாசிக்க வேண்டும். இதனால் அவர்களது அறிவு பெருகுவதுடன் நல்ல விடயங்கள் அவர்களிடம் பதிவாகவும் செய்யும்.

ஆக விரும்பியோ விரும்பாமலோ மனிதனில் தாக்கம் செலுத்தும் கேட்டல் திறனை மிகவும் சிறந்த முறையில் பயன்படுத்தி மனதைப் பண்டுத்த வேண்டும். ஒருவன் எவ்வளவு அதிகமாக அறிவு பூர்வமான , அறிவிற்கு விருந்தான விடயங்களை கேட்கின்றானோ அதே அளவு அவனுக்கு அறிவு, சிந்தனை என்பன வளர்ச்சியடைகின்றன. ஆகவே அதன் மூலம் மொழி ஆற்றல்களையும், திறன்களையும் ஏனைய அறிவியல் செய்திகளையும் அறிந்து ஆராய்ந்து, அறிவிற்கு பலம் சேர்க்கும் கேட்டல் திறன் மூலம் பயன்பெற வேண்டும். மனிதன் கேட்டு வந்த விடயங்களை காலப்போக்கில் மொழியப் பயில்கிறான். இதனால் அவன் பேசும் திறனை பெற்றுக் கொள்கிறான்.

**2. பேசுதல் திறன் (Speaking skill ) :**

மனிதனை விலங்குகளிடமிருந்து பிரித்துக்காட்டும் தனித்துவமான திறன்தான் பேச்சுச் திறன். செவியுறும் பேச்சுதான் நல்லவனை கெட்டவனாகவும் , கெட்டவனை நல்லவனாகவும் மாற்றும். அதே போல் கோழையை வீரனாகவும் , வீரனை கோழையாகவும் மாற்றும். இப்படியான சக்தியும் வல்லமையும் கொண்டுள்ள பேச்சு மொழித்திறன்களில் இரண்டாவது இடத்தினைப் பிடித்துக்கொள்கின்றது.

மனிதன் தான் வாழ்ந்த சூழலில் பேசப்பட்டு வந்த மொழிகளை செவிகளினூடாகக் கேட்டு கற்றுக்கொண்டு அவற்றின் மூலம் தகவல்களையும் , செய்திகளையும் வாய்மொழி மூலம் பரிமாறிக் கொள்கின்றான். இவ்வாறு தகவல்கள் வாய் மூலத்தகவல்களாக மாத்திரமே நாகரிகங்கள், சமூகங்களுக்கு மத்தியில் காணப்பட்டது. மனிதன் அத்தகவல்களை பதிவுசெய்ய வேண்டும் என்று பல முயற்சிகளை மேற்கொண்டான். இதன் விளைவாக தோற்றம் பெற்றதே எழுதுதல் எனும் மொழித்திறனாகும்.

**3. படித்தல் திறன் (Reading skill) :**

ஒருவர் மற்றவரிடம் இருந்து கேட்டவைகளை வெறுமனே செவி வழித்தகவல்களாக பரிமாறிவந்த மனிதன் கேட்டவைகளுக்கும் பேசியவைகளுக்கும் எழுத்து வடிவம் கொடுத்ததுடன் அதனை வாசிக்கும் முறையையும் வழங்கி வாசிக்க முற்பட்டான். இதனால் பிற்காலத்தில் வாசிப்பு எனும் மொழித்திறன் தோற்றம் பெற்றது. ஒவ்வொரு மொழியிலும் எழுத்துக்கள் தோன்றியுள்ளதுடன் அச்சு இயந்திரக் கண்டு பிடிப்பு, எழுத்துத் துறையின் வளர்ச்சி மற்றும் வாசிப்பின் வளர்ச்சியையும் அறிய முடிகின்றது.

முதலில் படித்தல் என்றால் என்ன என்பதனை அறிய வேண்டும். வாசித்தல் என்பது மொழிரீதியாக படித்தல் என்ற நேரடி கருத்தினைக் கொண்டுள்ளது. அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணமாக பின்வரும் வரைவிலக்கணம் காணப்படுகின்றது. 'கையெழுத்தில் அல்லது அச்செழுத்தில் உள்ளதை கண்களால் கண்டு வாயால் உச்சரித்து சொல்லின் பொருள் உணர்வதே வாசிப்பு' Dr.ந.சுப்பு ரெட்டியார், கண்களால் கண்டு வாயினால் மொழிந்து சொல்லின் பொருள் உணர்தலே வாசிப்பு என சிறந்ததோர் வரைவிலக்கணத்ததை வழங்கியுள்ளார். இவரது கருத்தின்படி வாசிப்பு என்பது காணல், உச்சரித்தல், பொருளுணர்தல் எனும் முக்கூறுகளிலும் தங்கியுள்ளது என்பதனை விளங்கமுடிகிறது. அதோடு கூட வாசித்தவற்றை பொருள் உணர்ந்து மனதில் படிவிப்பது என்ற பொருளையும் படித்தல் என்னும் சொல் உணர்த்துகிறது. இது பிறரின் எழுத்துக்களை ஆழ்ந்து படிப்பதன் வாயிலாக ஒருவன் தனது சிந்தனையைப் பெருக்கிக் கொள்ள வழிகோலுகிறது .

படித்தல் எனும் இம்மொழித் திறனே மனிதனின் அறிவியல் வளர்ச்சிக்கும், கண்டுபிடிப்புகளுக்கும் ஆணிவேர் என்றால் அது மிகையாகாது. காரணம் படித்தல் திறன் மனித அறிவினைப் பட்டை தீட்டி கூர்மையாக்கும் புத்தாக்கங்களுக்கும் சிந்தனைகளுக்கும் வித்திடுகின்றது.

**4. எழுதுதல் திறன் (writing skill):**

காலங்கள் பல கடந்து மனிதன் தன் சமூகத்தில் கேட்டு, பேசப்பட்டுவந்த ஒலிகளுக்கு குறியீட்டு உருவம் கொடுத்து பாதுகாக்கவும் அதன் மூலம் எதிர்கால சந்ததியினர் பயனடையவும் வேண்டும் என்றநிலையில்தான் தனித்தனியான குறியீடுகள் தோற்றம் பெற்றன. இதனை பல்வேறு மனித நாகரீகங்களிலும் நாம் காணலாம். மனிதன் அக்குறியீடுகள் மூலம் முக்கிய குறிப்புகளையும் நிகழ்வுகளையும் ஆவணப்படுத்தி பாதுகாக்கும் முயற்சியினை மேற்கொண்டான். ஓலைகள் , மண்டை ஓடுகள் , மரங்கள் , பலகைகள், விலங்குகளின் எலும்புகள் , தோல்கள் மற்றும் கற்கள் , கற்குன்றுகள் போன்றவைகளில் எழுதி வந்தான்.
மொசப்பதேமியா, சீனா , எகிப்து , அமெரிக்கா ஆகிய நாகரிகங்களில் தனித்தனியான எழுத்து முறைகள் தோன்றியுள்ளதனை அறிய முடிகின்றது. எழுத்தின் கருத்துரையானது சுமேரியர்களிடமிருந்தே வந்திருப்பதாகவும் ஆய்வாளர்கள் அடையாளப்படுத்துகின்றனர். சீனா, மொசொப்பொதேமியா எழுத்து வடிவங்களின் தாக்கமே இன்று பாவனையிலுள்ள எழுத்துகளில் பெருமளவில் தாக்கம் செலுத்தியுள்ளன.

காலப்போக்கில் எழுதப்பட்ட விடயங்கள் தொகுத்துப் பாதுகாக்கபட்டன. பிரதிகள் அரிதாகவே காணப்பட்டதுடன் வசதி படைத்தவர்களுக்கு மாத்திரமே கிடைத்தது. 1436 ஆம் ஆண்டு அச்சு இயந்திரத்திரம் ஜோஹனஸ் கூட்டன்பெர்க் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது முதல் எழுத்துத் துறை அபார வளர்ச்சி கண்டது. இது அறிவியல் வளர்ச்சிக்கு புரட்சி செய்த கண்டுபிடிப்பு எனவும் வர்ணிக்கப்டுகின்றது. நூல்களின் எண்ணிக்கை அதிகரித்ததுடன் அனைவரும் பயன்படுத்தும் வகையில் நூல்களின் பயன்பாடு அதிகரிக்கத் தொடங்கியது. அதனால் நூலகங்கள் பல தோற்றம் பெற்றன. படித்தல் எனும் மொழித்திறன் வளாச்சியடைய ஆரம்பித்தது.

இந்நான்கு மொழித்திறன்களையும் உட்கொள்ளுதல் மற்றும் வெளியிடுதல் என்னும் அடிப்படையில் முக்கியமாக இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**1. உள்வாங்கும் திறன்கள் (Input skill):**

உள்வாங்கும் மொழித்திறன்கள் என்பன, மொழியின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்யும் திறன்களாகும். இவை தகவல்களை அல்லது தரவுகளை உள்வாங்கி வெளியீட்டுத் திறனின் வளர்ச்சிக்கு வித்திடுகின்றன. அவை,

- கேட்டல் திறன்
- வாசித்தல் திறன்

**2. வெளியீட்டுத் திறன்கள் (Out put skill):**

வெளியீட்டுத்திறன்கள் என்பன உள்ளீட்டுத் திறன்களால் உள்வாங்கப்பட்ட தகவல்களை அல்லது தரவுகளை வெளியீடு செய்யும் திறன்களாகும். அதாவது உள்வாங்கிய தரவுகளை ஒழுங்கு முறைப்படுத்தி தகவல்களாக வழங்குவதனைக் குறிக்கின்றது. அவை,

- பேசுதல் திறன்
- எழுதுதல் திறன்

இவ்வாறு மொழித்திறன்கள் பல்வேறு பங்களிப்பினை நம்வாழ்வில் வழங்குகின்றன. மொழி என்பது மிகவும் ஆழமாக ஆராயப்பட வேண்டிய பல்வேறு தலைப்புக்களை உள்ளடக்கியது. ஆகவே மொழியினை வளப்படுத்துவது நம்மை நாம் எவ்வாறு அன்றாடம் அலங்கரித்து எம்மை அழகுபடுத்துகிறோமோ அது போன்று நம்மை வளப்படுத்தும் , பலப்படுத்தும் ஒன்று என்பதனை இம்மொழித்திறன்கள் மூலம் விளங்கிக்கொள்ளலாம்.

**1.2 எழுதுதல் திறனின் முக்கியத்துவம்**

எழுதுதல் திறன் என்பது நம் எண்ணங்களையும் சிந்தனைகளையும் எழுத்துப்பூர்வமாக வெளிப்படுத்துவதற்கான போதுமான ஆற்றலைக் கொண்டிருப்பதாகும். வாக்கிய அமைப்பு, சொற்களஞ்சியம், இலக்கணம் மற்றும் பிற அடிப்படை எழுத்துத் திறன்கள் தேவைப்படுவதால், மாணவர்கள் எழுதுதல் திறனைத் தொடர் பயிற்சியின் மூலம் மேம்படுத்த முடியும்.

ஒரு குழந்தை எழுத ஆரம்பிக்கையில், அதன் மூளையில் பலவிதமான துறுதுறுப்புகள் உண்டாகின்றன. இந்த துறுதுறுப்புகள் எழுத்துச் சிந்தனையால் ஏற்படுபவை. பின்னர், எழுதிய அந்த விஷயங்களை குழந்தையானது பேச முயல்கிறது. வரைதல் என்பதும் தகவல் தொடர்பின் ஒரு நிலை. தகவல்தொடர்பின் ஒரு அற்புத நிலையாக வரைதல் திகழ்கிறது. குழந்தைகளுக்கு முன்பருவபள்ளி(Preschool) ஒரு முக்கிய காலகட்டம். தன்னுடைய உணர்வுகளை எளிய முறையில் தெரிவிக்கும் வகை வரைதலாகும்.

எழுத்திற்கு முன்னர் வரைதலே, தகவல் தொடர்பாக இருந்தது. வரைதல் என்பது சிறந்த கலை என்றாலும், தகவல் தொடர்பு என்ற அளவில் இது மிகவும் இன்று ஒதுங்கியிருக்கிறது. ஏனெனில், இது ஒரு அறிவியலாக வளரவில்லை. குழந்தையை வரைய ஊக்குவிக்கவும். தனது மனதில் இருப்பதை குழந்தை வரையப் பழகுவது நல்லது. பின்னர், சிறிது சிறிதாக அதை எழுதுவதற்குப் பழக்கலாம். அதிகமாகப் பேசும் குழந்தைக்கூட, எழுதும்போதுதான் திருப்தியாகவும், அமைதியாகவும் இருக்கும்

எழுதுதல் செயல்பாடானது, ஒரு குழந்தைக்கு மகிழ்ச்சி உணர்வையும், திருப்தியையும் தருகிறது. இதில் ஒரு குழந்தைக்கு மகிழ்ச்சி கிட்டுகிறது. எனவே ஒரு வளரும் மேதைக்கு எழுத்து என்பது முக்கியமானது. எழுதுதலானது, ஒரு குழந்தையின் சிந்தனையை தெளிவுபடுத்துகிறது. இதைத்தவிர, பிறருடன் ஒத்துப்போகும் திறன் மற்றும் அமைப்புத் திறனையும் மேம்படுத்துகிறது. மேலும், நல்ல எழுத்துப் பயிற்சி ஒரு சிறந்த தகவல் தொடர்பாளராகவும் குழந்தையை மேம்படுத்துகிறது.

மாணவர்களின் மொழி சார்ந்த அடிப்படை திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய அடிப்படை திறன்களை மேம்படுத்த தொடக்கப் பள்ளிகளில் அதிகமான முக்கியத்துவம் தரப்படுகிறது. ஒரு மாணவனின் எழுதுதல் திறன் மேம்பாட்டால் அவன் எதிர்கால வாழ்வில் அடையப்போகும் நன்மைகளாவன,

**அ) கல்வி வெற்றி** :

வலுவான எழுதுதல் திறன் கல்வி வெற்றிக்கு அடித்தளமாக உள்ளது, அது மாணவர்களுக்கு எழுதும் பணிகள், கட்டுரைகள் மற்றும் அறிக்கைகள் ஆகிய பல்வேறு பாடங்களில் சிறந்து விளங்க உதவுகிறது.

**ஆ) தொடர்பு திறன்:**

எழுதுதல் திறனை மேம்படுத்துவது, மாணவர்கள் திறம்பட தொடர்பு கொள்ளவும், கருத்துக்கள், எண்ணங்கள் மற்றும் தகவல்களை தெளிவு மற்றும் ஒத்திசைவுடன் வெளிப்படுத்தவும் உதவுகிறது.

**இ) விமர்சன சிந்தனை:**

எழுதுவது விமர்சன சிந்தனையை ஊக்குவிக்கிறது, மாணவர்கள் தங்கள் எண்ணங்களை தர்க்கரீதியாக வெளிப்படுத்தவும் ஒழுங்கமைக்கவும் கற்றுக்கொள்கிறார்கள், அவர்களின் பகுப்பாய்வு திறன்களை மேம்படுத்துகிறார்கள்.

**ஈ) தொழில் ஆயத்தநிலை:**

திறமையான தகவல்தொடர்பு என்பது ஒவ்வொரு தொழிலிலும் மதிப்புமிக்க திறமையாக இருப்பதால், எதிர்கால வாழ்க்கை வெற்றிக்கு திறமையான எழுதுதல் திறன் அவசியம்.

**உ) சுய வெளிப்பாடு:**

மாணவர்கள் தங்களை ஆக்கப்பூர்வமாக வெளிப்படுத்தவும், சுய கண்டுபிடிப்பு மற்றும் தனித்துவத்தை வளர்ப்பதற்கும் எழுத்து ஒரு ஊடகமாக விளங்குகிறது. தனக்கே உரிய படைப்பாற்றலை வளர்ப்பதற்கு ஒரு வடிகாலாகவும் உறுதுணையாகவும் திகழ்கிறது.

**ஊ) நம்பிக்கையை வளர்ப்பது** :

எழுதுதல் திறனை மேம்படுத்துவது தன்னம்பிக்கையை அதிகரிக்கிறது, மாணவர்கள் தங்கள் கருத்துக்களையும் நம்பிக்கையுடன் பகிர்ந்து கொள்ள உதவுகிறது.

**எ) சிக்கலைத் தீர்ப்பது** :

எழுதும் பணிகளில் பெரும்பாலும் சிக்கலைத் தீர்ப்பது, சவால்களை முறையாக அணுகி தீர்வுகளை முன்மொழியும் திறனை மாணவர்கள் வளர்க்க உதவுகிறது.

**ஏ) வாழ்நாள் கற்றல்:**

எழுதுதல் என்பது வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான ஒரு கருவியாகும், இது மாணவர்களை புதிய கருத்துகளை ஆராயவும், அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ளவும், வகுப்பறைக்கு அப்பாற்பட்ட தகவலுடன் ஈடுபடவும் அனுமதிக்கிறது.

**ஐ) எண்மக் (Digital) கல்வியறிவு** :

எண்ம யுகத்தில், மின்னஞ்சல்கள், சமூக ஊடகங்கள் மற்றும் பிற இனைய தளங்கள் உட்பட பயனுள்ள இணையத் தகவல்தொடர்புக்கு வலுவான எழுத்துத் திறன்கள் முக்கியம்.

**ஒ) கலாச்சார மற்றும் சமூக விழிப்புணர்வு:**

ஆரம்ப மாணவர்களிடம் சமூக விழிப்புணர்வை வளர்ப்பது, பல்வேறு கண்ணோட்டங்கள், கலாச்சாரங்கள் மற்றும் அனுபவங்களை ஆராய்வதற்கு எழுத்து உதவுகிறது.

**1.3 படங்களும் எழுதுதல் திறனும்**

ஒரு படம் ஆயிரம் வார்த்தைகளுக்குச் சமம் என்று கூறுவார்கள். படம் என்பது காகிதம், பலகை, சுவர் போன்றவற்றின் மேற்பரப்பில் காட்சிப்படுத்தப்பட்ட பொருட்களின் ஓவியமாகும். கற்பித்தல் ஊடகத்தில், இது காட்சி உதவிக்கு சொந்தமானது. ஊடகம் போன்ற படம் மாணவர்களை ஊக்குவிக்கவும், அவர்கள் கையாளும் பாடத்தை தெளிவாக்கவும், குறிப்பிட்ட ஒரு பொருள் அல்லது செயலின் பொதுவான கருத்து மற்றும் வடிவங்களை விளக்கவும் முடியும்.

படம் எழுதுவதற்கும் பேசுவதற்கும் சிறந்த தூண்டுதலாகும். அந்த படம் ஏராளமான சாத்தியக்கூறுகளை வழங்குகிறது. ஒரு குழுவில் உள்ள படங்களின் விளக்கங்களை எழுத மாணவர்களை நாம் தூண்டலாம். நாம் கொடுக்கும் படங்களின் அடிப்படையில் அவர்கள் பல்வேறு கருத்துக்களை எழுதலாம். கதாபாத்திரங்களின் உள் எண்ணங்கள் அல்லது

அவர்களைப் பற்றிய ஒரு கட்டுரையை எழுத வைக்கலாம். இந்த செயல்பாடுகள் அனைத்தும் மாணவர்களைச் சுதந்திரமாக, ஈர்க்கக்கூடிய வகையில் எழுத வாய்ப்பளிக்கின்றன.

ரைட் (1989) என்பார், மாணவர்களின் ஆர்வம் மற்றும் ஊக்கம், சூழலில் மொழி உணர்வு மற்றும் மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கு படங்கள் பங்களிக்கின்றன என்று கூறுகிறார். ஒரு மொழியின் பேசுதல் மற்றும் எழுதுதல் திறன்களை வளர்த்தெடுப்பதில் படங்களின் பங்களிப்பாவன,

1. படம் மாணவர்களின் ஊக்கத்தையும் கவனத்தையும் ஈர்த்து, அவர்களைக் கற்றலில் பங்கேற்கச் செய்யும்.
2. படங்கள் சூழல் சார்ந்த மொழி கற்றல் செயல்பாட்டை உருவாக்கலாம்.
3. படங்கள் புறநிலையாகவும் அகநிலை ரீதியாகவும் விளக்கத்தை உயர்த்தலாம்.
4. படங்கள் கேள்விகளுக்கான பதிலைக் குறிக்கலாம் அல்லது கட்டுப்படுத்தப்பட்ட நடைமுறைகளாக இருக்கலாம்.
5 உரையாடல், கதை சொல்லுதல் மற்றும் விவாதம் ஆகியவற்றைக் கையாள்வதில் படங்கள் தூண்டுதல் மற்றும் தகவல்களை வழங்க முடியும்.

மேலும், வகுப்பறையில் பயன்படுத்தப்பட வேண்டிய படங்களில், ஐந்து நடைமுறை அளவுகோல்கள் உள்ளன என்று அவர் குறிப்பிடுகிறார்,

(1) தயாரிப்பது எளிது,

(2) ஒழுங்கமைப்பது எளிது,

(3) சுவாரஸ்யமானது,

(4) அர்த்தமுள்ள மற்றும் உண்மையானது, மற்றும்

(5) முடிவை நிறுவுவதற்கான போதுமான விளக்கம்.

ஹீடன் (1990:107) என்பாரின் கூற்று, ‘அன்றாட வாழ்க்கையில், மாணவர்கள் சில சமயங்களில் மக்கள், பொருள்கள், இடங்கள் மற்றும் செயல்முறைகளை விவரிக்க

வேண்டியிருக்கலாம். நிகழ்வுகள், சம்பவங்கள் போன்றவற்றின் வரிசைகளைப் பற்றி எழுதி, வழிகாட்டுதல்களை வழங்க வேண்டிய நேரங்களும் இருக்கும். மேலும் எழுத்து மொழியைப் பயன்படுத்துவதில் அவர்களின் முழு கவனத்தையும் செலுத்த உதவுகிறது.' ஆகவே படம் என்பது, ஆசிரியரிடமிருந்து மாணவருக்கு ஒரு செய்தியை தெரிவிக்க உதவும். மொழியைக் கற்கும்போது படம் நன்றாகப் பயன்படுத்தப்படுகிறது,

**1.4 தொடர்ச்சித்திரங்களை பார்த்து கதை எழுதுதல் திறன்**

வண்ணப் படங்கள் குழந்தைகளை எப்பொழுதும் தம்வசம் கவர்ந்து இழுப்பவை. அந்த வண்ணப் படங்களைப் பார்த்ததுமே குழந்தைகள் தம் கற்பனை உலகத்தில் சிறகடித்து பறக்க ஆரம்பித்து விடுகின்றன. இது உளவியல் ரீதியாகவும் உண்மையாக இருப்பதால்தான் தொடக்கப்பள்ளி பாட புத்தகங்களும் வகுப்பறைகளும் வண்ண வண்ணப் படங்களால் நிரப்பப்பட்டுள்ளன. எழுத்துக்களே பயிலாத சிறு குழந்தைகூட புத்தகத்தைப் புரட்டிப் பார்த்து வண்ணப் படங்களை கண்டு மகிழ்ச்சி கொள்கிறது.

பொதுவாக தொடக்கப்பள்ளி மாணவர்கள் படங்களை கண்டு அவற்றில் உள்ளவற்றை அறிவதில் மிகவும் ஆர்வம் காட்டுவர். அதிலும் குறிப்பாக கதைசார்ந்த தொடர் சித்திரங்களைக் காணும்போது, தங்களின் சொந்த கற்பனை கலந்து அவற்றை விளக்குவதில் முனைப்பு காட்டுவர். அந்தப் படங்கள் மாணவர்கள் எழுதுவதற்கு ஒரு சிறந்த சூழலை உருவாக்குவதோடு மட்டுமில்லாமல் அவர்களுக்கு எழுதுவதற்கான ஊக்கத்தையும் அளிக்கின்றன. கதை நிகழ்வுகளைப் பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி தொடராக அமைத்து எழுத உதவுகின்றன. மேலும், தொடர்ச்சித்திரங்கள் மாணவர்கள் எழுத வேண்டியவற்றைத் திட்டமிட்டு வரிசைப்படியும் முறைப்படியும் எழுதுவதற்குத் துணைபுரிகின்றன. அவை மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதோடு தங்களின் கருத்துக்களை ஒருங்கிணைத்து எழுதுவதற்கும் உதவுகின்றன.

படங்களில் தான் காணும் பல்வேறுப் பொருள்கள் மற்றும் சூழல்சார்ந்த சொற்களை நினைவிற்கு கொண்டுவரவும் அவற்றை முறைப்படுத்தி சரியான சொற்றொடராக

அமைக்கவும் அடுத்தடுத்த படங்களைப் பார்த்து நிகழ்வுகளை வரிசை முறைப்படி எழுதவும் மாணவர்களுக்கு உதவக்கூடியதாக தொடர்ச் சித்திரங்கள் அமைந்துள்ளன. ஆகவே இவற்றை பயன்படுத்தி ஆசிரியர் மாணவர்களின் கதை எழுதும் திறனை வளர்ப்பதோடு எதிர்காலத்தில் அவர்களைப் படைப்பாற்றல் மிக்கோராக செய்யவும் இயலும்.

**2. ஆய்வின் பின்புலம்**

நமது அரசின் கல்விக் கொள்கைகளின் நோக்கங்களை நிறைவேற்றும் முகத்தான் நம் கல்விக்கான கலைத்திட்டம் வடிவமைக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். அந்த கலைத்திட்டத்தின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும்படியாக உரிய பாடத்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. இதன் அடுத்த கட்டமாக பாடத் திட்டத்தில் குறிப்பிட்டுள்ள பல்வேறு திறன்களை மாணவர்கள் அடையச் செய்யும் பொருட்டு சிறந்த கல்வியாளர்கள் மற்றும் அனுபவமிக்க ஆசிரியர்களைக் கொண்டு உரிய பாடப்பொருள்களுடன் கூடிய பாடநூல்கள் உருவாக்கப்படுகின்றன. அதைப்போன்று மாணவர்கள் கற்றல் அடைவுகளை போதுமான அளவிலும் விரும்பத்தக்க அளவிலும் பெற்றுள்ளார்களா என்பதை அளந்து அறிவதற்கான ஆவணமாக கற்றல் விளைவுகள் என்னும் மதிப்பீட்டு தொடர்களைக் கொண்டு 'தொடக்கக் கல்வியில் கற்றல் விளைவுகள்' என்னும் ஆவணத்தை தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், புது தில்லி உருவாக்கி அளித்துள்ளது.

இந்த ஆவணத்தில் ஒன்று முதல் எட்டு வகுப்புகளுக்கான தமிழ், ஆங்கிலம், கணிதம், அறிவியல் மற்றும் சமூக அறிவியல் ஆகிய பாடங்களுக்கான கற்றல் விளைவுகளும் அதற்கான கற்பித்தல் செயல்முறைகளும் தெளிவாக தரப்பட்டுள்ளன. அந்த வகையில் ஐந்தாம் வகுப்பு தமிழ் பாடத்தில் பன்னிரண்டு கற்றல் விளைவுகளும் அவற்றிற்கான கற்பித்தல் செயல்முறைகளும் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. அவற்றுள் 506 முதல் 512 வரையிலான ஏழு கற்றல் விளைவுகளுமே மாணவர்களின் எழுதுதல் மேம்பாட்டிற்கானதாக அமைந்துள்ளன. மாணவர்கள், இலக்கணக்கூறுகளை புரிந்து பயன்படுத்துதல், சரியான நிறுத்தற்குறிகளைப்

பயன்படுத்துதல், பொருத்தமான சொற்கள் மற்றும் சொற்றொடர்களைப் பயன்படுத்துதல், கற்பனையுடன் கூடிய கதைகள், பாடல்கள், கடிதங்கள் எழுதுதல் ஆகிய செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கேற்ற வகையில் வகுப்பறை கற்பித்தல் செயல்முறைகளை உருவாக்கும் பொருட்டு இந்த செயலாய்வு மேற்கொள்ளப்பட்டது

## வகுப்பு – 5 தமிழ் – கற்றல் விளைவுகள்

| க.வி. எண் | கற்றல் விளைவு<br>கற்போர், |
|---|---|
| 501 | மாணவர்கள் தாங்கள் கேட்ட அல்லது படித்த பல்வேறு வகை இலக்கியங்கள் குறித்துப் பேசவும் அவை குறித்துக் கலந்துரையாடவும், பகுப்பாய்வு செய்யவும் வாய்ப்பு அளித்தல். |
| 502 | தங்களின் சுற்றுப்புறத்தில் நடக்கும் பல்வேறு நிகழ்வுகளுக்கு எதிர்வினை புரிதல் (எழுத்துவடிவில்) மற்றும் வினாக்கள் எழுப்புதலை ஊக்கப்படுத்துதல். |
| 503 | ஒருவர் மொழியின் நுட்பமான கூறுகளை மனத்திற்கொண்டு தங்களுக்கான சொந்தமொழியைக் கட்டமைக்க வேண்டும். |
| 504 | தாங்கள் படித்த, கேட்ட (சமூகம், நகைச்சுவை, வீரச்செயல்கள்) கருத்துகள் பற்றிப் பேசவும், வினாக்கள் எழுப்பவும் தங்கள் நோக்கத்திற்கு ஆதரவான விளக்கம் அளிக்கவும் இயலுதல். |
| 505 | சொற்களின் பொருளை அகராதிகளில் கண்டறிதல். |
| **506** | மொழியின் இலக்கணக் கூறுகளைப் புரிந்துகொண்டு அவற்றைத் தம் எழுத்துகளில் கவனமாகப் பயன்படுத்துதல். |
| **507** | பல்வேறு சூழல்களில் பல்வேறு நோக்கங்களுடன் எழுதும்போது நிறுத்தக் குறிகளைப் பயன்படுத்துவதில் கவனத்துடன் இருத்தல். |
| **508** | பல்வேறு தலைப்புகளின் கீழ் படிநிலைப்படுத்தப்பட்ட (graded) சொற்களையும், தொழில்கள் மற்றும் பண்பாடு சார்ந்த சொற்களையும், நன்றாகப் புரிந்துகொள்ளுதல்; பொருத்தமான இடங்களில் பயன்படுத்துதல். |
| **509** | தங்கள் சுற்றுப்புறத்தில் நடக்கும் நிகழ்வுகளை நுட்பமாக உற்றுநோக்கி அவற்றுக்கான எதிர்வினைகளை எழுத்துவடிவில் பதிவுசெய்தல். |
| **510** | பல்வேறு நோக்கங்கள் மற்றும் சூழல்களை அடிப்படையாகக்கொண்டு எழுதும்போது அவற்றிற்கேற்றபடியான சொற்கள், தொடர்கள், நிறுத்தக்குறிகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல். |
| **511** | பாடநூல்களில்/ துணைப்பாட நூல்களில் இடம்பெறும் உணர்வுப்பூர்வமான சிக்கல்களை எழுத்துவடிவில் வெளிப்படுத்துதல். |
| 512 | **ஒருவரது கற்பனையின் அடிப்படையில் கதைகள், பாடல்கள், கடிதங்கள் எழுத அனுமதித்தல், அவற்றை ஊக்குவித்தல்.** |

**3. ஆய்வின் தேவை**

தமிழ் பாடத்திட்டம் - 2017 இன் படி, தொடக்க நிலை வகுப்புகளுக்கான மொழித் திறன்களை சீரிய முறையில் மாணவர்களுக்கு கற்பிப்பதன் பொருட்டு ஐந்தாம் வகுப்பு தமிழ் பாடநூல் ஆக்கப்பட்டுள்ளது. இந்தப் பாடநூலிலுள்ள ஒவ்வொரு இயலிலும் செய்யுள், உரைநடை, துணைப்பாடம், இலக்கணம் மற்றும் பயிற்சி பகுதிகள் ஆகியன அமைந்துள்ளன.

மாணவர்கள் மொழித்திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் ஆகியவற்றை கற்பதன் நோக்கம், பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள பாடங்களைப் படித்து பயிற்சியில் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுதல் மட்டுமே அல்ல. மாறாக இந்த மொழித் திறன்களை கற்பதன் நோக்கம், திறன்களை அல்லது அறிவைத் தங்களின் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்த இயலும் தன்மையை பெறுவதாகும். மாணவர்கள் தங்கள் வாழ்க்கையின் பல்வேறு தேவைகளுக்காக கேட்கவும் பேசவும் படிக்கவும் எழுதவும் இயலுதல் வேண்டும். இதை கருத்தில் கொண்டுதான் மாணவர்களின் மொழித் திறன்களை முறையாக கற்கச் செய்து அதன் விளைவுகளை அளந்து அறிவதற்காக தமிழ்மொழிப் பாடத்திற்கான கற்றல் விளைவுகள் ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை மிகத் தெளிவாக '**தொடக்கக் கல்வியில் கற்றல் விளைவுகள்**' என்னும் ஆவணத்தில் வரையறுக்கப்பட்டு நிரல்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆவணத்தில் ஐந்தாம் வகுப்புக்கான தமிழ் பாடத்திற்கு 12 கற்றல் விளைவுகள் வடிவமைத்து தரப்பட்டுள்ளன. அவற்றுள் இறுதியான கற்றல் விளைவான,

"**512. ஒருவரது கற்பனையின் அடிப்படையில் கதைகள், பாடல்கள், கடிதங்கள் எழுத அனுமதித்தல், அவற்றை ஊக்குவித்தல்.** "

என்னும் கற்றல் விளைவில் கூறப்பட்டுள்ளபடி, மாணவர்கள் கதைகள் எழுதுவதை ஊக்குவிக்கும்பொருட்டு, அதற்கேற்ற கற்பித்தல் செயல்முறையினை உருவாக்கி அளிக்கும்வண்ணம் இந்த செயலாய்வானது மேற்கொள்ளப்பட்டது.

**4. ஆய்வு நோக்கங்கள்**

மாணவர்களுக்கு,

- கற்பனைத் திறனை வளர்த்தல்
- சொந்த நடையில் எழுதும் திறனை வளர்த்தல்
- சொல்லாட்சி திறனை வளர்த்தல்
- சரியான முறையில் தொடர் அமைக்கும் திறனை வளர்த்தல்
- நிறுத்தக்குறிகளை பயன்படுத்தும் திறனை வளர்த்தல்
- முறையான பத்தி அமைத்து எழுதும் திறனை வளர்த்தல்
- கதை நிகழ்வுகளை நிரல்பட எழுதும் திறனை வளர்த்தல்
- இலக்கணக் கூறுகளை அறிந்து எழுதும் திறன் வளர்த்தல்

**5. பிரச்சனையைக் கண்டறிதல்**

மொழித் திறன்களில் பேசுதல் திறனும் எழுதுதல் திறனும் வெளியிடும் திறன்களாக அறியப்பட்டுள்ளன. இவற்றுள் மாணவர்கள் எழுதும்போது பலவிதமான தவறுகளைச் செய்கின்றனர். குறிப்பாக தொடக்கப்பள்ளி நிலையில், இறுதி வகுப்பான ஐந்தாம் வகுப்பு மாணவர்களிடம் எழுதுதல்சார்ந்த கற்றல் விளைவுகள் அதிகமாக எதிர்பார்க்கப்படுகின்றன. இந்நிலையில் அம்மாணவர்கள் சொந்தமாக எழுத வேண்டிய கதைகள், கட்டுரைகள், கடிதங்கள் ஆகியவற்றில் பிழைகள் அதிகமாக காணப்பட்டன. பொதுவாக பேச்சு வழக்குச் சொற்களைப் பயன்படுத்தியும் இலக்கண முறைப்படி அமையாமலும் பல மாணவர்கள் எழுதியிருந்தனர். மேலும் சரியான சொற்றொடர் அமைப்புமுறை இல்லாமலும் பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடாமலும் பெரும்பாலான மாணவர்கள் எழுதியிருந்தனர். குறிப்பாக மாணவர்கள். கதை எழுதுதலில் நிகழ்வுகளைக் கோவையாக எழுதக்கூடிய திறன் அற்றவர்களாக இருந்தனர். சில மாணவர்கள் கதை நிகழ்வுகளை வரிசைமாற்றியும் எழுதியிருந்தனர்.

**6. பிரச்சனையின் வரையறை**

மாணவர்கள் கதை எழுதும் பொழுது நிகழ்வுகளைக் கோவையாக வரிசைகிரமப்படி எழுதுவதிலும் அனைத்து கதை மாந்தர்களின் செயல்பாடுகளை முழுமையாக எழுதுவதிலும் இடர்ப்படுகின்றனர். பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி சரியான சொற்றொடரை உரிய நிறுத்தக்குறிகளுடன் எழுதுவதில் இடர்ப்படுகின்றனர்.

**7. பிரச்சனைக்கான உத்தேச காரணங்கள்**

மாணவர்கள் எழுதும் போது நேரக்கூடிய பிழைகளுக்கான உத்தேச காரணங்களாவன,

- சொற்களுக்கான சரியான எழுத்துக்களை அறியாமை
- பேச்சு வழக்குச் சொற்களை பயன்படுத்துதல்
- எழுத்து வழக்குச் சொற்களை அறியாமை
- சரியான தொடர் அமைப்பினை அறியாமை
- இலக்கணம் அறியாமை
- நிறுத்தற்குறிகளைச் சரியாக பயன்படுத்த அறியாமை
- தொடர்புச் சொற்களை பயன்படுத்த அறியாமை
- நிகழ்வுகளை வரிசைப்படுத்தி எழுத தெரியாமை

**8. பிரச்சனைக்கான உத்தேச தீர்வுகள்**

- ✓ பொருத்து அட்டைகளைப் பயன்படுத்தி பேச்சு வழக்குச் சொல்லுக்கு இணையான எழுத்து வழக்குச் சொல்லினை அறியச் செய்தல்.
- ✓ தொடர் அட்டைகளைப் பயன்படுத்தி நேர்கூற்று மற்றும் அயற்கூற்று வாக்கியங்களை அறிய செய்தல்.
- ✓ தமது சுற்றுப்புறத்தில் கேட்ட கதைகளை எழுத்து நடையில் வகுப்பறையில் கூறச் செய்தல்

- ✓ சிறுவர் இதழ்களை கொடுத்து அவற்றில் உள்ள கதைகளில் தரப்பட்டுள்ள நிறுத்தக் குறியீடுகளை வட்டமிட செய்தல்.
- ✓ தொடர் சித்திரங்களைக் காட்டி அதில் உள்ள கதை நிகழ்வுகளை வரிசை மாறாமல் எழுத செய்தல்.

**9. செயல் கருதுகோள்**

மாணவர்களுக்குத் தொடர்ச் சித்திரங்களைக் காட்டி அதில் உள்ள கதை நிகழ்வுகளை எழுதச் செய்யும்போது அவர்களின் சொந்த நடையில் எழுதுதல் சார்ந்த பிழைகள் கணிசமாக குறைகின்றன.

10. ஆய்வுமுறை

**அ. செயலாய்வுக்கு உட்படுவோர்**

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஒன்றியம், செட்டிகுறிச்சி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், தமிழ் வழி மற்றும் ஆங்கில வழியில் ஐந்தாம் வகுப்பு பயிலும் 15 மாணவர்கள் மற்றும் 10 மாணவியர் ஆக மொத்தம் 25 பேர் இந்தச் செயலாய்வுக்கு உட்படுத்தப்பட்டனர். இந்தத் தொடக்கப் பள்ளி, கிராமப் பகுதியில் அமைந்த பள்ளியாகும் இப்பள்ளியில் மூன்று இடைநிலை ஆசிரியர்கள் மற்றும் ஒரு தலைமை ஆசிரியர் பணி புரிகின்றனர்.

**ஆ. ஆய்வுக் கருவி**

இந்த செயலாய்வில் பின்வரும் ஆய்வுக் கருவிகள் ஆய்வாளரால் பயன்படுத்தப்பட்டன.

1. முன் சோதனை: கேட்ட கதையினை முழுமையாக எழுதுதல்.

2. பின் சோதனை: தொடர்ச்சித்திரங்களைப் பார்த்து கதை எழுதுதல்

**முன் சோதனை நடத்துதல்**

மாணவர்களின் கதை எழுதும் திறனை அறிவதற்காக முன் சோதனை நடத்தப்பட்டது. ஆய்வாளர் வாசிக்கும் கதையினைக் கவனமாக கேட்க மாணவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. ஆய்வாளர் மாணவர்களுக்கு 'குல்லா வியாபாரியும் குரங்குகளும்' என்னும் தலைப்பிலான கதையினை மூன்று முறை வாசித்துக் காட்டினார். அதன் பின்பு மாணவர்கள் அனைவருக்கும் விடைத்தாள்கள் வழங்கப்பட்டன. மாணவர்கள் கேட்ட

கதையினை முழுமையாக விடைத்தாளில் எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். கதையினை எழுதுவதற்காக மாணவர்களுக்கு முப்பது மணித்துளிகள் வழங்கப்பட்டன.

**இ. இடையீட்டுச் செயல்பாடுகள்**

ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்குத் தொடர்ச்சித்திரங்களைப் பார்த்து கதை எழுதும் பயிற்சி மூன்று நாட்கள் நடத்தப்பட்டது. ஒவ்வொரு நாளும் ஒரு கதைக்கான தொடர்ச்சித்திரங்கள் மாணவர் முன்னால் காட்சிப்படுத்தப்பட்டன. ஒவ்வொரு கதையும் ஆறு தொடர்ச்சித்திரங்களைக் கொண்டது. மாணவர்கள் அவற்றில் உள்ள கதாபாத்திரங்களையும் அவற்றின் செயல்பாடுகளையும் அவை நிகழும் சூழலையும் நன்கு உற்று நோக்க வேண்டும். மாணவர்கள் தொடர்ச்சித்திரங்களில் தாம் பார்த்த கதையினை முழுமையாக விடைத்தாளில் எழுதுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். கதையினை எழுதுவதற்காக மாணவர்களுக்கு முப்பது மணித்துளிகள் வழங்கப்பட்டன.


கீழ் காணும் குறிப்புகளை மனதிற்கொண்டு கதையினை எழுத மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள்.

- ✓ பொருத்தமான சொற்களை எழுத்து பிழையின்றி எழுத வேண்டும்
- ✓ சரியான தொடர் அமைத்து எழுத வேண்டும்
- ✓ நிறுத்தக்குறிகளைச் சரியாக பயன்படுத்த வேண்டும்
- ✓ கதை மாந்தர்களின் செயல்பாடுகளை முழுமையாக எழுத வேண்டும்
- ✓ நிகழ்வுகளின் வரிசைப்படிபத்தியமைத்து எழுத வேண்டும்


**முதல் நாள்** ‘புத்திசாலி முயல்’ என்ற தலைப்பிலான தொடர்ச்சித்திரங்கள் மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டு மாணவர்கள் அதற்கான கதையினை தாளில் எழுத பயிற்சி அளிக்கப்பட்டது.



**இரண்டாம் நாள்** 'நேர்மையான மரம்வெட்டி' என்ற தலைப்பிலான தொடர்ச்சித்திரங்கள் மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டன. அதற்கான கதையினை மாணவர்கள் தாளில் எழுத பயிற்சி அளிக்கப்பட்டது.



**மூன்றாம் நாள்** 'முயலும் ஆமையும்' என்ற தலைப்பிலான தொடர்ச்சித்தரங்கள் மாணவர்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டன. அதற்கான கதையினை மாணவர்கள் தாளில் எழுத பயிற்சி அளிக்கப்பட்டது.



**பின் சோதனை நடத்துதல்**

தொடர்ச்சித்திரங்களைக் கொண்டு கதை எழுத மாணவர்களுக்கு மூன்று நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. இந்த பயிற்சிக்குப் பின்பு மாணவர்களின் கதை எழுதும் திறனை அறிவதற்காக பின் சோதனை நடத்தப்பட்டது. ஆய்வாளர் 'குல்லா வியாபாரியும் குரங்குகளும்' என்ற கதைக்குரிய தொடர்ச்சித்திரங்களை மாணவர்கள் முன்பு காட்சிப்படுத்தினார். அதில் ஆறு தொடர்ச்சித்திரங்கள் இருந்தன. மாணவர்கள் அந்த தொடர்ச்சித்திரங்களை உற்று நோக்கி கதையினை முழுமையாக விடைத்தாளில் எழுதுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். கதையினை எழுதுவதற்காக மாணவர்களுக்கு முப்பது மணித்துளிகள் வழங்கப்பட்டன.

மாணவர்கள் முன் சோதனையிலும் பின் சோதனையிலும் எழுதிய கதைகள் பின்வரும் மதிப்பீட்டுக் கூறுகளில் மதிப்பீடு செய்யப்பட்டன.

| **வ. எண்** | **மதிப்பீட்டுக் கூறு** | **மதிப்பெண்** |
|---|---|---|
| 1 | பொருத்தமான சொல் பயன்பாடு | 5 |
| 2 | சரியான சொற்றொடர் அமைப்பு | 5 |
| 3 | சரியான நிறுத்தக் குறியீடுகள் இடுதல் | 5 |
| 4 | கதைமாந்தர் செயல்பாட்டினை முழுமையாக எழுதுதல் | 5 |
| 5 | கதை நிகழ்வுகளை நிரல்பட எழுதுதல் | 5 |
| | **மொத்தம்** | **25** |

**11. தரவுப் பகுப்பாய்வு**

விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, செட்டிகுறிச்சி பள்ளியில் ஐந்தாம் வகுப்பு பயிலும் மாணவர்கள் இந்த செயல் ஆராய்ச்சிக்கு உட்படுத்தப்பட்டார்கள். அவர்களுக்கு முன்சோதனை நடத்தப்பட்டது. பின்பு தொடர்ச்சித்திரங்களைக் கொண்டு கதை எழுத மாணவர்களுக்கு மூன்று நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. இறுதியாக பின் சோதனை நடத்தப்பட்டது. இந்த சோதனைகளின் வாயிலாக மாணவர்கள் பெற்ற மதிப்பெண் விவரங்கள் தரவுகளாகச் சேகரிக்கப்பட்டன. இத்தரவுகளைக்கொண்டு கூட்டுச்சராசரி, இடைநிலை அளவு மற்றும் முகடு ஆகியவைக் கணக்கிடப்பட்டன.

**அ) கூட்டுச் சராசரி**

கணிதம் மற்றும் புள்ளியியலில், கூட்டுச்சராசரி (Arithmetic mean) என்பது எடுத்துக்கொள்ளப்பட்ட எண்களின் தொகுப்பில், சமபங்கீட்டு முறையில் காணப்பட்ட நடுநிலை எண்ணைக் குறிப்பதாகும். பெருக்கற் சராசரி, இசைச்சராசரி போன்ற பிற சராசரிகளிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவதற்காக இச்சராசரி கூட்டுச் சராசரி என்று அழைக்கப்படுகிறது. ஒரு தொகுப்பின் கூட்டுச்சராசரி அத்தொகுப்பிலுள்ள எல்லா எண்களின் கூட்டுத்தொகையை அத்தொகுப்பிலுள்ள மொத்த எண்களின் எண்ணிக்கையால் வகுக்கக் கிடைக்கிறது.

கூட்டுச்சராசரி = இராசிகளின் கூட்டுத்தொகை / இராசிகளின் எண்ணிக்கை

**ஆ) இடைநிலையளவு**

கணிதம் மற்றும் புள்ளியியலில், இராசிகளின் இடைநிலையளவு அல்லது இடையம்(median) என்பது இராசிகளை ஏறு அல்லது இறங்கு வரிசையில் வரிசைப்படுத்தினால் நடுவில் உள்ள இராசியைக் குறிக்கும். இராசிகளின் எண்ணிக்கை

ஒற்றையாக இருந்தால், நடுவில் உள்ள இராசி இடைநிலையளவாக அமையும். இராசிகளின் எண்ணிக்கை இரட்டையாக இருந்தால், நடுவில் உள்ள இரண்டு இராசிகளின் கூட்டுச்சராசரி இடைநிலையளவாக அமையும். எடுத்துக்கொள்ளப்பட்ட தரவின் உயர்பாதியைக் கீழ்பாதியிலிருந்து பிரிக்கும் மதிப்பாக இடைநிலையளவு இருக்கும்.

**இ) முகடு**


கணிதம் மற்றும் புள்ளியியலில், தரவின் முகடு அல்லது ஆகாரம் (mode) என்பது அத்தரவில் அடிக்கடி காணப்படும் மதிப்பாகும். கூட்டுச் சராசரி, இடைநிலையளவு போன்று இதுவும் ஒரு மையப்போக்கு அளவையாகும். ஒரு தரவின் தன்மையைப் பிரதிபலிக்கும் தனி மதிப்புகளான மையப்போக்கு அளவைகளில் ஒன்றாக முகடு இருந்தாலும் அது கணிக்கப்படும் முறையால் துல்லியமான அளவையாகக் கொள்ள முடியாது. எனினும் இது எளிதாகக் கணிக்கக் கூடிய ஒரு மையப்போக்கு அளவையாகும்.

**மாணவர்கள் முன்சோதனை மற்றும் பின்சோதனையில் பெற்ற மதிப்பெண்கள் விவரம்**

| வ. எண் | மாணவர் பெயர் | மதிப்பெண்கள் | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | முன்சோதனை | | பின்சோதனை | | வேறுபாடு | |
| | | 25 க்கு | 100 க்கு | 25 க்கு | 100 க்கு | 25 க்கு | 100 க்கு |
| 1 | அ.அஸ்வின் | 10 | 40 | 18 | 72 | 8 | 32 |
| 2 | பா. சரவணவேல் | 11 | 44 | 19 | 76 | 8 | 32 |
| 3 | செ. தயாநிதி | 12 | 48 | 18 | 72 | 6 | 24 |
| 4 | ச. பிரவீன் குமார் | 13 | 52 | 20 | 80 | 7 | 28 |
| 5 | இரா. கவின் | 10 | 40 | 18 | 72 | 8 | 32 |
| 6 | செ. கிருஷ்ணகுமார் | 14 | 56 | 21 | 84 | 7 | 28 |
| 7 | இரா. சபரி ராகவன் | 11 | 44 | 18 | 72 | 7 | 28 |
| 8 | அ. விஷ்வா | 12 | 48 | 19 | 76 | 7 | 28 |
| 9 | மா. கார்த்தி சரண் | 10 | 40 | 16 | 64 | 6 | 24 |
| 10 | செ. ஹர்ஷித் | 13 | 52 | 21 | 84 | 8 | 32 |
| 11 | க. கௌதம் | 13 | 52 | 20 | 80 | 7 | 28 |
| 12 | கி. அன்புவேல் | 13 | 52 | 20 | 80 | 7 | 28 |
| 13 | பா. சஞ்சய் | 11 | 44 | 19 | 76 | 8 | 32 |
| 14 | அ. வீரபாண்டியன் | 11 | 44 | 19 | 76 | 8 | 32 |
| 15 | ம. மோகன் குமார் | 12 | 48 | 19 | 76 | 7 | 28 |
| 16 | சி. பவித்ரா | 13 | 52 | 20 | 80 | 7 | 28 |
| 17 | க. கமலி | 14 | 56 | 23 | 92 | 9 | 36 |
| 18 | சி. திவ்யா | 14 | 56 | 21 | 84 | 7 | 28 |
| 19 | மு.மினோதர்ஷினி | 15 | 60 | 23 | 92 | 8 | 32 |
| 20 | இ. பூர்விகா | 15 | 60 | 23 | 92 | 8 | 32 |
| 21 | க. இளைய செல்வி | 13 | 52 | 21 | 84 | 8 | 32 |
| 22 | இ. மகேஸ்வரி | 12 | 48 | 19 | 76 | 7 | 28 |
| 23 | ம. தன்ஷிகா | 13 | 52 | 22 | 88 | 9 | 36 |
| 24 | க. லதா பாண்டி | 10 | 40 | 18 | 72 | 8 | 32 |
| 25 | பா. யாமினி | 14 | 56 | 23 | 92 | 9 | 36 |

**முன்சோதனை மற்றும் பின்சோதனைய- ஓர் ஒப்பீடு**

| சோதனை | சராசரி | இடை நிலையளவு | முகடு |
|---|---|---|---|
| முன் சோதனை | 47 | 52 | 52 |
| பின் சோதனை | 80 | 80 | 76 |




**பின் சோதனையில் மாணவர் பெற்ற மதிப்பெண் விவரங்கள்:**

- 92 சதவீதம் பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை - 4
- 88 சதவீதம் பெற்ற மாணவர் எண்ணிக்கை - 1
- 84 சதவீதம் பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை - 4
- 80 சதவீதம் பெற்ற மாணவர்கள் எண்ணிக்கை - 4
- மாணவர்கள் பெற்ற சராசரி மதிப்பெண் - 80

## 12. ஆய்வு முடிவுகள்

இந்தச் செயலாய்வின் முடிவில் நடத்தப்பட்ட பின் சோதனையில் மாணவர் பெற்ற மதிப்பெண் கூட்டுச்சராசரி என்பது மாணவர்கள் உயர் தேர்ச்சி நிலையை அடைந்துள்ளார்கள் என்பதை குறிக்கிறது. பின் சோதனையில் மாணவர் பெற்ற மதிப்பெண்களின் இடைநிலை அளவு உயர்ந்துள்ளமை, பெரும்பாலான மாணவர்கள் அதிகமான தேர்ச்சி பெற்றுள்ளனர் என்பதை காட்டுகிறது. பின் சோதனையில் பெறப்பட்ட முகடு, அதிக எண்ணிக்கையிலான மாணவர்கள் உயர் மதிப்பெண் பெற்றுள்ளனர் என்பதை காட்டுகிறது.

இந்த ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட இடையீட்டுச் செயல்பாடுகளின் காரணமாக, மாணவர்களுக்கு பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துதல், சரியான சொற்றொடர் அமைத்தல், நிறுத்தக்குறிகளைச் சரியாக கையாளுதல், கதை நிகழ்வுகளை நிரல்பட முழுமையாக எழுதுதல் ஆகிய திறன்கள் அதிகரித்து கதை எழுதும் திறன் மேம்பட்டுள்ளது.

## 13. பரிந்துரைகள்

ஒரு தொடக்கப் பள்ளி ஆசிரியர், அடிப்படைத் திறன்களில் தலையாயதாக கருதப்படும் எழுதுதல் திறனை மாணவர்களுக்கு வளர்த்தெடுக்க வேண்டியது அவசியமாகிறது. ஆசிரியர் தொடர் சித்திரங்களை கொண்டு கதை எழுதுதல் பயிற்சியைத் தருவதோடு மட்டும் நில்லாமல், பின்வரும் செய்திகளையும் மாணவர்களுக்கு எழுதுதல் திறன் வளர்க்கும் பயிற்சியாகக் கொடுத்து எழுத செய்யலாம். அவையாவன,

- உண்மைச் சம்பவங்கள்
- வரலாற்று நிகழ்வுகள்
- அறிவியல் உண்மைகள்
- அன்றாட செய்திகள்
- பள்ளி விழா நிகழ்வுகள்
- களப்பயண நிகழ்வுகள்

- ❖ வலையொலிக் காட்சிகள்
- ❖ பெரியோரின் சொற்பொழிவுகள்

இவைபோன்ற வேறுபல செய்திகளையும் ஆசிரியர் மாணவர்களுக்கு எழுதுதல் பயிற்சியாக தரலாம். அவ்வாறு மாணவர்கள் எழுதும்பொழுது, எழுதக்கூடிய செய்திசார்ந்த பொருத்தமான சொற்களைப் பயன்படுத்தி சரியான சொற்றொடர் அமைத்து எழுதுவது, சரியான நிறுத்தக்குறிகளைப் பயன்படுத்துவது, அனைத்து செய்திகளையும் நிரல்பட முழுமையாக எழுதுவது ஆகியவற்றை ஆசிரியர் உறுதிப்படுத்த வேண்டும்.

**14. முடிவுரை**

இன்றைய காலகட்டத்தில் தகவல் தொடர்பு திறன் மிகவும் தேவையான ஒன்றாக வலியுறுத்தப்படுகிறது. அதிலும் எழுத்து மூலம் தகவல்களைப் பகிர்ந்து கொள்வது என்பது நிரந்தரமானப் பதிவாக கருதப்படுகிறது. அந்தவகையில் இந்தச் செயலாய்வு செய்திகளை நிரல்பட முழுமையாக எழுதும்திறனை முக்கியத்துவப்படுத்துகிறது. கற்பித்தல் கற்றல் செயல்முறையில் பட ஊடகத்தைப் பயன்படுத்தி மாணவர்களின் எழுதும் திறனை மேம்படுத்தலாம். இந்த ஆராய்ச்சியின் விளைவு, படங்களைப் பயன்படுத்தி கற்றல் செயல்முறையைக் கற்பிப்பது மாணவர்களின் எழுத்துத் திறனை வளர்க்கும். மாணவர்களின் சொல்லகராதி, இலக்கண தேர்ச்சி, அவர்களின் தன்னம்பிக்கை மொழிக் கற்றலில் அவர்களின் உந்துதல் ஆகியவற்றில் வளர்ச்சிகள் உள்ளன. மேலும் ஆசிரியர்கள்,படங்களைப் பயன்படுத்துவதன் மூலம் எழுத்துக் கற்பித்தல் செயல்முறையைப் புரிந்து கொள்ள முடியும்.

முன்சோதனைக்கான படங்கள்



ஆய்வாளர் கூறும் கதையினை மாணவர்கள் கேட்டல்



மாணவர்கள் தான் கேட்ட கதையினை எழுதுதல்

# இடையீட்டுச் செயல்பாடுகள்



ஆய்வாளர் தொடர் சித்திரங்களைப் பார்த்து கதை எழுதும் முறையை விளக்குதல்



மாணவர்கள் தொடர்ச்சி சித்திரங்களை பார்த்து கதை எழுதுதல்



மாணவர் தமது ஐயப்பாடுகளை ஆய்வாளரிடம் கேட்டல்



மாணவர் தமது ஐயப்பாடுகளை ஆய்வாளரிடம் கேட்டல்

பின் சோதனைக்கான படங்கள்



மாணவர்கள் தொடர்ச் சித்திரங்களை உற்று நோக்குதல்




மாணவர்கள் தொடர் சித்திரங்களில் காணும் கதையை எழுதுதல்

## துணைநூற்பட்டியல்


1. **Brown, J. W. Lewis, R. B. And Harcleroad, F.F. 1983.** Audio Visual Instruction.

   New York: McGraw Hill, Inc.

2. **Chan, Michelle. 1989.** Process and Product. New York: Coller-Macmillan.
3. **Graddol, D. 2006.** EFL,ESL,ESOL,etc:on the changing face of English and
4. **Harmer. 2007.** Theory and Practice of Writing. Oxford: Oxford University Press.
5. **Heaton, J. B. 1990.** Classroom Testing. New York: Longman
6. **Madsen, Harold S. 1983.** Techniques in Testing. Oxford: Oxford University Press
7. **McMahan, Elizabeth. 1996.** Literature and Writing Process. New Jersey:

   Prentice-Hall.

**முன் சோதனை**

**கீழ்க்காணும் கதையினை மூன்றுமுறை வாசிக்கவேண்டும். அதன்பின்பு மாணவர்கள் கேட்ட கதையினை முழுமையாக தாளில் எழுத வேண்டும்.**

ஒரு குல்லா வியாபாரி தன் தலையில் குல்லா நிரம்பிய கூடையை சுமந்து வந்தார். அவர் ஊர் ஊராக சென்று குல்லா வியாபாரம் செய்து வந்தார். ஒரு நாள் அவர் ஓர் ஊருக்கு நடந்து சென்று கொண்டிருந்தார். அப்பொழுது வெயில் மிகவும் கடுமையாக இருந்தது. ஆகவே அவர் செல்லும் வழியில் உள்ள மர நிழலில் சிறிது நேரம் தங்கி ஓய்வெடுக்கலாம் என்று நினைத்தார். ஆகவே அந்தப் பெரிய மரத்தின் அடியில் தன் குல்லா கூடையை இறக்கிவைத்தார். அவரும் அருகே படுத்து ஓய்வு எடுத்தார்.


அந்த மரத்தின் கிளைகளில் சில குரங்குகள் வாழ்ந்து வந்தன. அவை கூடையில் உள்ள குல்லாக்களைப் பார்த்து விட்டன. அவை ஒவ்வொன்றாக கீழிறங்கி வந்து கூடையில் இருந்த குல்லாவை எடுத்தன. குல்லா வியாபாரியை போலவே அதை தம் தலையில் மாட்டிக் கொண்டன. அவை மறுபடியும் மரக்கிளைகளில் ஏறிக்கொண்டன.

படுத்து ஓய்வெடுத்த வியாபாரி கண் விழித்து எழுந்தார். தனது கூடை காலியாக இருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தார். பின்னர் குரங்குகளின் சத்தம் கேட்டு தன் தலையைத் தூக்கி மேலே பார்த்தார். அவர் நடந்த உண்மையை உணர்ந்து கொண்டார். குரங்குகளிடமிருந்து தனது குல்லாக்களைத் திரும்பப் பெறுவதற்கு ஒரு யோசனை செய்தார்.

அந்த வியாபாரி தான் அணிந்திருந்த குல்லாவை எடுத்து தன் கூடையில் வீசினார். அதைப் பார்த்த குரங்குகளும் அவர் செய்தபடியே தாம் அணிந்திருந்த குல்லாவை எடுத்து கூடையில் வீசின. அனைத்து குல்லாக்களும் கூடைக்கு வந்து சேர்ந்ததைக் கண்டு வியாபாரி மகிழ்ச்சி அடைந்தார். மீண்டும் குல்லா கூடையை தன் தலையில் சுமந்தபடி அடுத்த ஊரை பார்த்து நடக்கத் தொடங்கினார்.

# பின் சோதனை

கீழ்க் காணும் தொடர்ச் சித்திரங்களைக் கவனமாக உற்று நோக்கி அதில் உள்ள கதையினை எழுதுக.



## செயலாராய்ச்சி சுருக்கம்

| | |
|---|---|
| செயலாராய்ச்சியாளர் பெயர் | வெ.ந.சடாச்சரவேல் |
| பதவி | முதுநிலை விரிவுரையாளர் |
| நிறுவனத்தின் பெயர் | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், பாலையம்பட்டி ,விருதுநகர் மாவட்டம். |
| செயலாய்வுத் தலைப்பு | ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் கதை எழுதுதல் திறனைத் தொடர்ச்சித்திரங்களைப் பயன்படுத்தி மேம்படுத்துதல். |
| ஆய்வு நோக்கங்கள் | 1. சொல்லாட்சி திறனை வளர்த்தல்<br>2. தொடர் அமைக்கும் திறனை வளர்த்தல்<br>3. நிறுத்தக்குறிகளை பயன்படுத்தும் திறனை வளர்த்தல்<br>4. முறையான பத்தி அமைத்து எழுதும் திறனை வளர்த்தல்<br>5. கதை நிகழ்வுகளை நிரல்பட எழுதும் திறனை வளர்த்தல் |
| ஆய்விற்கு உட்படுவோர் | விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை ஒன்றியம், செட்டிகுறிச்சி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில், தமிழ் வழி மற்றும் ஆங்கில வழியில் ஐந்தாம் வகுப்பு பயிலும் 15 மாணவர்கள் மற்றும் 10 மாணவியர் ஆக மொத்தம் 25 பேர். |
| ஆய்வுக் கருவிகள் | 1முன் சோதனைகேட்ட கதையினை முழுமையாக : .எழுதுதல்<br>.2பின் சோதனைதொடர்ச்சித்திரங்களை :ப் பார்த்து கதை எழுதுதல். |
| ஆய்வு முறை | முன் சோதனை,இடையீட்டுச் செயல்பாடுகள், பின்சோதனை (ஒற்றைக் குழு பரிசோதனை முறை) |
| ஆய்வு முடிவுகள் | மாணவர்களுக்கு பொருத்தமான சொற்களைப் பயன்படுத்துதல், சரியான சொற்றொடர் அமைத்தல் , நிறுத்தக்குறிகளைச் சரியாக கையாளுதல் கதை , நிகழ்வுகளை நிரல்பட முழுமையாக எழுதுதல் ஆகிய திறன்கள் அதிகரித்து கதை எழுதும் திறன் மேம்பட்டுள்ளது. |
| ஆய்வுச் செலவினம் | ரூ9600- |